# திண்ணை சிறுகதைகளில் மரபும் பண்பாடும் -ஓர் ஆய்வுப் பார்வை

**முனைவர் பெ.சரண்யா**
**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை**
**அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**பண்டுதகாரன் புதூர், மண்மங்கலம்,**
**கரூர்-06 தமிழ்நாடு**
saranadhavika@gmail.com

**ஆய்வுசுருக்கம்**

தமிழ் சமுகத்தின் வாழ்வியல், பண்பாடு, மரபுகள் ஆகியவற்றின் அடையாலமாகத் திகழ்ந்தது திண்ணை. குடும்ப உறவுகள், விருந்தோம்பல் , சமூக ஒற்றுமை, பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவை திண்ணையை மையமாகக் கொண்டு வளர்ந்தன. இத்தகைய மரபுசார் பண்பாட்டுக் கூறுகள் சிறுகதையில் நோக்கமாக அமைந்துள்ளது. கால மாற்றத்தால் திண்ணையின் பயண்பாடு முக்கியத்துவம் இலக்கியங்களில் தொடர்ந்து நிலைத்திருப்பதை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாய்வின் மூலம் திண்ணை என்பது வெறும் கட்டீட அமைப்பு அல்ல தமிழர்களின் மரபு பண்பாடு சமுக வாழ்வியல் மற்றும் அறவாழ்வின்அடையாலமாக விளங்குகிறது.

**முக்கிய சொற்கள்**

பரிணாம வளர்ச்சி,ஆழ்கடல் , மரபுப்பண்புகள் ,பாரம்பரிய, இயல்பு, சூழ்நிலைக்கேற்றவாறு , உயர்ந்தோர், கௌரவம்

**முன்னுரை**

மானுட சமூகம் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே படிப்படியான பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது. இதற்கு மக்கள் வாழ்ந்த நிலம் மற்றும் சுற்றுப்புறச்சூழல்களைக் அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட வளர்ச்சியை அடைந்துள்ளது. இத்தகைய வளர்ச்சி நிலைகள் தனி மனிதனின் மனதில் உண்டாக்கிய மாற்றத்தை நம்பிக்கைகளாகவும் பழக்க வழக்கங்களாகவும் பண்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறான மன மாற்றங்களை காலம் காலமாக பின்பற்றப்பட்டு

வருகின்றன. இத்தகைய அனுபவங்களை தனது வாழ்வியலில் கண்டுணர்ந்த படைப்பாளர்கள் அவர்களின் அனுபவங்களின் சாரத்தை கதைமாந்தர்களின் வழி வெளிப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் திண்ணை சிறுகதையில் குறிப்பிடப்பட்டுள்ள பண்பாட்டு கூறுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நோக்கம்**

தமிழ்ர் வாழ்வியலை அடிப்படையாக கொண்டு விளங்குவது மரபியல் பண்பாட்டுக் கூறுகள் இவை மக்களின் வாழ்க்கை நெறிகளை பிரதிபலிக்கிறது. இந்த வகையில் திண்ணை சிறுகதையில் இடம்பெற்றுள்ள குடும்ப மரபுகள் பண்பாடு நம்பிக்கை விருந்தோம்பல் சமூக ஒழுக்கங்கள் ஆகியவை பண்பாட்டு முக்கியத்துவத்தை மையப்படுத்துகிறது. மரபுக்கும் நவீன கால மாற்றத்திற்கும் இடையேயான மாற்றங்களை கலை நயத்துடன் ஆசிரியர் இயற்றியுள்ளார்.

**ஆய்வு அனுகுமுறை**

இவ்வர்ய்வு விளக்கவியல், மற்றும் பகுப்பாய்வு அனுகுமுறையைப் பின்பற்றுகிறது. இதில் மரபியல் பண்பாட்டுக்கூறுகள் தொகுக்கப்பட்டு விளக்கப்டுகின்றன. தேவையான இடங்களில் ஒப்பீட்டு அணுகுமுறையும் கையாளப்பட்டு தொடர்புடைய ஆய்வு நூல்கள் துணைமை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**மரபு - பொருள் விளக்கம்**

அபிதான சிந்தாமணியில் மரபு என்ற சொல்லுக்கு,

"**1. தந்தை மரபு, தாய் மரபு**

**2. யாதொரு பொருளை யாதொரு சொல்லால் யாதொரு நெறியால்**

**அறிவுடையார் சொன்னார்களோ அப்படி சொல்லுதல்" 1**

என்று சிங்காரவேலு முதலியார் விளக்கமளித்துள்ளார்.

**" முறைமை சான்றோரின் சொல் பழமை வமிசம் பாரம்பரியம் இயல்பு**

**இலக்கணம் நல்லொழுக்கம் பெருமை பாடு நியாயம் வழிபாடு பருவம்**" 2

என்று தமிழ் அகரமுதலி மரபுக்கு விளக்கம் அளிக்கின்றது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியல் மரபு என்பதற்கு,

"மருவு, முறைமை ஈண்டுசெலன் மரபிற்றன்னியல் வழாது (புற-25)

சான்றோரின் சொல் வழக்கு முறை (நன்-388) பழமை (சூடா) வமிசம்"

என்றவாறு பொருள் கொள்ளப்படுகிறது. மரபு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் **legacy** என்று கூறப்படுகிறது. இதற்கு,

பரம்பரைச் சொத்து தானம்" 3

என்று பொருள் உணர்த்தப்படுகின்றது. New millennium ஆங்கில அகராதியில்,

"**பரம்பரைச் சொத்து உருவக வருகையால் முன்னோர் வழி வந்த பண்பு**

**முதலியன**" 4 என்று கூறப்பட்டுள்ளது.

**மரபு சொல்லும் பொருளும்**

வழிவழியாகத் தொடர்ந்து செய்துகொண்டு வருவதையே மரபு என்கிறோம். அதாவது முன்னோர்கள் ஒரு பொருளை எச்சொல்லால் எவ்வாறு கூறினாரோ அப்பொருளை அச்சொல்லால் அவர் வழங்கியவாறு பயன்படுத்தப்படுவது மரபு.

'நாய் குரைத்தது' என்பது மரபு சார்ந்த சொல்லாகும். இதனையே 'நாய் பேசியது' என்று கூறும்போது மரபு மீறலாகிறது. பசு ஈன்றதைக் கன்று என்பது மரபு. மக்களின் குழந்தைகளைப் பிள்ளை என்பது மரபு. இதற்கு மாறாக பசுவின் பிள்ளை என்பது மரபு மீறலாகிறது.

உயர்திணையாகக் கூறப்பட்டு வருவதை அஃறிணையுடன் கூறுவது மரபு மீறல்.

**"தாழிரும் தடக்கையும் மருப்பும் தம்பியர்**

**தோழர்கள் தாள்களாச் சொரியும் மும்மதம்**

**ஆழ்கடல் சுற்றமா அழன்றுசீவ**

**எழுயர் பேதகம் இனத் தொடேற்றதே**" 5 என்று சீவகசிந்தாமணியில் கூறப்படுகிறது. இப்பாடலில் 'தோழர்' என்ற உயர்திணை முதல், கை, மடுப்பு, தாள் ஆகிய சினைப் பெயர்களான அஃறிணையோடும் முதல் சினைகளோடும் மயங்கின என்பதனை உணர முடிகிறது.

**"மரபுப்பண்புகள் சில குறிப்பிட்ட விதிகளுக்கமையவே அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுகின்றன என கிரிகோர்மெண்டல் கூறினார். அந்த விதிகள் பின்னாளில் மெண்டலின் விதிகள் எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிறது."** 6 என்று இணையவழி மூலம் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

"**பாரம்பரிய இயல்புகள் சந்ததிகளுடாகக் கடத்தப்படும்போது உயிரினங்கள் தமது வாழ்வை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் அவற்றில் ஏற்படக்கூடிய மரபியல் வேறுபாடுகளாலும் அவற்றில் நிகழும் இயற்கைத் தேர்வு செயல்முறையாலும் உயிரினங்களின் கூறு நிகழ்வதை தனது படிவளர்ச்சிக் கொள்கை மூலம் சார்லஸ் டார்வின் விளக்கினார். ஆனாலும் அவர் 1859 ஆம் ஆண்டில் தனது படிவளர்ச்சிக் கொள்கை பற்றி அறிவித்தபோது பாரம்பரிய இயல்புகள் கடத்தப்படுவதற்கான நெறிமுறைகளை அறிந்திருக்கவில்லை."** 7 என்ற சார்லஸ் டார்வினின் கருத்து கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

"**மரபு கூட்டு சமுதாய வாழ்க்கை முறையினின்று உருவானவை. வர்க்க சமுதாயத்தில் வளர்ச்சி என்பன நீதிகள் சாஸ்திரங்கள் ஆகியவற்றிற்கு வழிகோலின. ஒரு சுரண்டல் சமுதாய அமைப்பு ஸ்திரமான போது இவ்வாறான மரபுகள் எல்லாம் ஆளும் வர்க்கத்தினருக்கு சாதகமான முறையில் அச்சமுதாய அமைப்பை பேணும் விதமாக ஒரு நிரந்தரத் தன்மையை எய்தின**" 8

என்று சிவகேசரம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உருவம் பெற்ற மரபு நீண்ட வரலாற்றுக் காலகட்டங்களுக்குப் பிறகு சமுதாய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமலும் சமுதாய மாற்றம் வேண்டியும் சூழ்நிலைக்கேற்றவாறு முரண்பட்டு நின்றது.

**பண்பாட்டு மரபு விளக்கம்**

மரபு என்னும் ஒற்றைச் சொல் பல்வேறு பொருண்மைகளிலும் துறைகளிலும் ஆளப்படுகின்றன. வழங்கக்கூடிய இடத்திற்கேற்பவும் சூழலுக்குத் தகுந்தவாரும் பொருண்மை மாற்றங்கொள்கிறது.

-  இலக்கணம்
-  இலக்கியம்
-  அறிவியல்
-  விலங்கியல்
-  மானிடவியல்
-  பண்பாட்டியல்
-  நாட்டுப்புறவியல்

போன்ற துறைகளோடு பெரிதும் தொடர்புடையது இச்சொல்.

மரபு என்பது பெற்றோர்கள் அல்லது முன்னோர்களிடமிருந்து சந்ததிகளுக்கு இயல்புகளை கடத்தப்படும் முறையாகும். உயிரணு அல்லது உயிரினம் உருவாகும்போதே பெற்றோர் உயிரணு அல்லது உயிரினத்திலிருந்து இயல்புகளை பெற்றுக்கொள்வது இந்த செயல்முறையினாலேயே நிகழ்கிறது. இந்த மரபு முறை இயற்கையாகவும் சூழல் தாக்கத்தினாலும் உயிரினங்களின் வேறுபாடுகளும் அவற்றில் புதிய இயல்புகள் உருவாகி புதிய இனங்களும் தோற்றம் பெறும் என்பதை உணர முடிகிறது. இவ்வாறான மரபுநிலை நாளடைவில் மனிதர்களின் நாகரீக முன்னேற்றம் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக மரபுமுறையில் எண்ணற்ற மாற்றங்களை சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

மனிதர்களால் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்த ஒவ்வொரு செயல்பாடுகளும் மரபு என்ற பகுப்பில் அடங்குகின்றன. அடுத்தடுத்த தலைமுறையினர் பின்பற்றி அதன் வழி நடத்தல் வேண்டும் என்பது மரபு. இதனை,

"**எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**

**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு**" 9

என்று நன்னூலார் மொழிகின்றார். சொற்கள் யாவும் பொருள்களை உணர்த்தும் குறியீடுகள் ஆகும். சொல்லானது உள்ளத்தில் உள்ளதைக் கேட்போன் சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்பது மரபு. ஒரு கருத்தாக்கத்தை முன்னோர் எப்படி வழங்கினார்களோ அதன் முறை தவறாமல் வழங்கி வருவதையே மரபு நிலை மாறாமை என்று கூறியுள்ளார்.

**பெண் தெய்வம் - மரபியல் பண்பாடு**

வீட்டின் முன்பகுதியில் உட்புறமாகவோ, வெளிப்புறமாகவோ திண்ணை கட்டுவது பண்டைய மரபு. திட்டுப்போல் அமைந்திருக்கும் திண்ணையில் அமர்ந்து பேசி பொழுது போக்குவது அக்கால பெரியவர்களின் வழக்காகும். 'திண்ணை' என்னும் சிறுகதையில் திண்ணையின் பெருமை உயர்வாகப் போற்றப்படுகிறது. திண்ணையை இருப்பிடமாகக் கொண்டு திண்ணை மீது பற்றுக்கொண்ட முதுமையான பெண்ணும் தெய்வமாக மதிக்கப்படுகிறார். பெண்ணை தெய்வமாகக் காண்பது தமிழரிடமுள்ள நம்பிக்கை எனலாம். இதனை திரு.வி.கல்யாணசுந்தரனார்,

"**பெண் மகளாகத் தோன்றினாள்,மனைவியாக வாழ்ந்தாள், தாயாக
தொண்டு செய்தாள், இப்பொழுது தெய்வமாகக் காட்சி
அளிக்கப்படுகிறாள், உலகீர்! அக்;காட்சி காண்மின், தெய்வம் தெய்வம்
என்று எங்கே ஓடுகிறீர் நூல்களை ஆராய்கிறார்? இதோ தெய்வம்
பெண்தெய்வம் காணுங்கள்É கண்டு வழிபடுங்கள்**" 10

என்று குறிப்பிடுகிறார்.

**திண்ணைக் காட்டும் மரபும் மாற்றமும்**

"**அத்தைக்கு வயது எண்பது. இரண்டு வரு~மாகக் கண் மங்கிக்
கொண்டே வந்தது. ஆபரே~ன் செய்தும் பயனில்லை. இரண்டு கண்களும்
தெரியவில்லை. புத்தி மாறாட்டமாகி விட்டதோ என்னவோ? ஆபரேசன்
ஆனவுடனேயே ஜுரம் வந்தது. எழுந்தது முதல் இதேதான் ஆனால்
அத்தைக்கு மட்டும் இடைகழித் திண்ணையை இடித்திலே துளியும்
விருப்பமில்லை. முதலில் ஆட்சேபித்து விட்டும், பிறகு பேசாமலும்
இருந்தாள். இப்போது அதுவே அடிமனதிலிருந்து எழும்பி வந்து சதா என்
முன்னே ராட்சச ஆட்டம் ஆடுகிறது. திண்ணையை இடிக்காமல் என்ன
செய்வது? பழைய காலத்திலேயே இடைக்கழித் திண்ணையும், வாசல்**

**திண்ணையும் அப்போதையச் சமூகப் பழக்க வழக்கங்களுக்கு நன்றாக இருந்தன.”**11

என்று திண்ணை சிறுகதையில் ஒரு மனிதனின் வாழ்வில் திண்ணை என்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அது தற்கால சூழலுக்கான மாற்றங்களாகவும் பண்பாடாகவும் மாறிவிட்டது என்பதனை,

“**அங்கே ஒரு நல்ல காற்றோட்டமான அறை கிடைத்தது சோபா செட் போட்டு அலங்காரமாக இருக்கிறது. நாலு பெரிய மனிதர்கள் வந்தால் கௌரவமாகவும் சௌகரியாகவும் இருக்கிறது**.”12

என்று குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது. வீட்டில் புதிய பயன்பாட்டிற்காக இடம் வேண்டி திண்ணை இடித்து அகற்றப்பட்டுள்ளது. பின்னர் திண்ணை இருந்த இடத்தில் வரவேற்பறை போன்ற இடம் அமைக்கப்பட்டுள்ளது. வயதான மீனாவின் அத்தைக்கு படுக்கைக்கு வசதியாக தேக்கம் பலகை அமைத்து மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமர்ந்து பேசுவது பழங்கால பழக்கமாக இருந்துள்ளது. பழங்கால பழக்கம் கொண்டவர்களுள் ஒருவராக மீனாவின் அத்தையும் இருந்துள்ளார். அவர் ஒருவருக்காக திண்ணையைப் பாதுகாப்பது வீண் என்று கருதி அவருக்கு ஓய்வு எடுப்பதற்கு மாற்று வசதி செய்து புதிய பயன்பாட்டிற்காக திண்ணை இடிக்கப்பட்டது. என்று குறித்துள்ளதன் மூலம் பண்டைய மரபிலும் பண்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவு.

**பண்பாட்டு மீட்டுருவாக்கம்**

பாட்டி அம்மாவின் மூத்த பையன் ஊரிலிருந்து வந்தான். அம்மாவின் திண்ணை பற்றிய புலம்பல் கண்டு மனம் இறங்கினான்.

**“அன்று இரவே இரண்டு கொல்லத்துக்காரர் ,ஒரு வண்டி செங்கல், சிமிட்டி, மணல் எல்லாம் வந்து சேர்ந்தன. காலையில் புழைக்கடை ரேழியில் ஒரு பெரிய திண்ணை அமைத்துக் கொண்டு நின்றது. அதன் மீது கோணி போர்த்தித் தண்ணீர் தெளித்துக் காப்பாற்றினோம். நான்கு நாட்கள்.”** 13

பாட்டியம்மாவின் மூத்தபையனின் முயற்சியால் புதிய திண்ணை கட்டப்பட்டதும், அதை நான்கு நாட்கள் உறைந்து காய விட்டு பாதுக்காக்கப்பட்ட பின்னர் பாட்டியம்மாவின் பயன்பாட்டிற்கு அவளிடம் கொடுக்கப்பட்டது பற்றி விளக்கப்படுகிறது.

திண்ணை இடிக்கப்பட்டு அதனை இழந்த நிலையில், பறிகொடுத்த உணர்வில் பாட்டி அம்மா புலம்பிக் கொண்டிருந்தாள். திண்ணையை எடுத்ததற்காக திட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் திண்ணை புதிதாக மீண்டும் கிடைத்தபோது அமைதி அடைந்தாள். அதுவே மீனாவுக்கு மகிழ்ச்சியை வழங்கியது.

## முடிவுரை :

திண்ணை என்பது மனித வாழ்விழும் சமூக கட்டமைப்பிலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை பாட்டியம்மா என்ற பாத்திரத்தின் வாயிலாக இச்சிறுகதை நன்கு உணர்த்துகிறது. திண்ணையென்பது அன்பின் குறியீடாக அமைந்து. அது தன்னிடம் பழகியவர்களுக்கு நீங்காத நினைவாய் உயிரோடிருப்பவரிடம் உறவு கொள்கிறது.

## அடிக்குறிப்பு

1. அபிதான சிந்தாமணி, ப.1266

2. தமிழ் தமிழ் அகரமுதலி, ப.419

3. English, English Tamil Comprehensive Dictionary> g.513

4. New Millehnium English Dictionary >g.540

5. சீவக சிந்தாமணி, ப.775

8. சிவசேகரம்., மரபும் மார்க்சிய வாதமும், ப.26

9. நன்னூல், பா.387

10. கல்யாணசுந்தரனார்.திரு.வி., பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, பக். 26,27

11. அ.வெண்ணிலா , மீதமிருக்கும் சொற்கள் சிறுகதைத் தொகுப்பு பக்.150, 151

12. மேலது, ப.153

13. மேலது, ப.153

11. அ.வெண்ணிலா , மீதமிருக்கும் சொற்கள் சிறுகதைத் தொகுப்பு பக்.150, 151

12. மேலது, ப.153

13. மேலது, ப.153

**Copyright & License:**
© Authors retain the copyright of this article. This work is published under the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), permitting unrestricted use, distribution, and reproduction in any medium, provided the original work is properly cited.